# சத்திய வேத
# பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

**யாழ். மேற்றிராசன**
**மறைக்கல்விப் பரீட்சை —1970**

எதிர்வரும் 19-11-70 வியாழக்கிழமை 4ஆம், 6ஆம், 7ஆம், 8ஆம் வகுப்புகளுக்கான மறைக்கல்விப்பரீட்சை அவ்வப் பாடசாலைகளில் நடந்தேறும்

ஜி. ரி. பாலசுந்தரம், O. M. I.
மறைக்கல்வி மேற்பார்வையாளர்.

95-ம் புத். | 1970-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 7-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 42-ம் இல.

## 1971இல் உலக மேற்றிராணிமார் சிநொட்

பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் திருச்சபையின் பரிபாலனத்தில் உலக மேற்றிராணிமார் யாவரையும் தம்முடன் நெருங்கிய முறையில் பங்குபெறச் செய்ய எடுத்துக்கொண்ட முறைகளில் இரு வருடங்களுக்கு ஒருமுறை உலக மேற்றிராணிமாரின் "சிநொட்" நடைபெற ஒழுங்கு செய்வதும் ஒன்றாகும். சிநொட் கூட்டங்களுக்கு ஆயத்தம் செய்வதற்கென 15 அங்கத்தவர் அடங்கிய நிரந்தர குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது, இரு மாதங்களுக்கு முதல் இக்குழுவினர் ஒன்றுகூடி 1971-ம் ஆண்டு நடக்க இருக்கும் கூட்டத்தில் ஆலோசனைக்குரிய விஷயங்களை ஆயத்தம் செய்துவிட்டனர். மறு பல விஷயங்களுடன் குருமாருக்குரிய பல பிரச்சினைகளும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட இருக்கின்றது என இக்குழுவின் காரியதரிசி அறிவித்திருக்கின்றார். "விரைவில் மாற்றம் அடைந்துவரும் இவ்வுலகத்தில் குருமார் தமது வேலையை எவ்வாறு திறம்பெற நடத்தலாமென ஆலோசிக்கப்படும்" என அவ்வறிக்கை கூறுகின்றது.

### சிட்னி அக்கிளிக்கன் அதிமேற்றிராணியாருக்கு சகாக்களின் கண்டனை

சிட்னிநகர அங்கிளிக்கன் அதிமேற்றிராணியார் லோன் அடிகளார், அந்நகரில் பரிசுத்த தந்தையுடன் சேர்ந்து மறு கிறிஸ்தவ சபைகள் நடத்தஇருக்கும் ஒற்றுமை இயக்க செப வைபவத்தில் தாம் கலந்துகொள்ள முடியாதிருப்பதாக அறிவித்திருக்கிறார், ஆனால் லோன் அடிகளாரின் அபிப்பிராயம் அப்பிரதேச அங்கிளிக்கன் சபையினரின் அபிப்பிராயம் அன்று என்பதை அங்கிளிக்கன் சபை மேற்றிராணியார் ஹவுஸ்டன் தெளிவுபடுத்தி மறு அங்கிளிக்கன். மேற்றிராணிமாரும் மெதடிஸ்ற் சபையினர் முதலியோரும் இவ் வைபவத்தை மிக ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாக அறிவித்திருக்கின்றார்.

### சமயகல்வி பெற்றோருக்கு அவசியம்

அகில ஐக்கிய அமெரிக்க தேச கத்தோலிக்க சங்கத்தின் தலைவர் திரு. லோறன்ஸ் லசோன்சி என்பவர் "பிள்ளைகளுக்குச் சமயக் கல்வி ஊட்டும் பொறுப்பு ஆசிரியர்மாருடையது எனக் கருதாது அப்பொறுப்பு பிரதானமாகப் பெற்றோருடையது எனப் பெற்றோர் யாவரும் கருதவேண்டும்" என அமெரிக்கதேச கத்தோலிக்க பெற்றோருக்கு எடுத்துக்காட்டியிருக்கிறார். அப்படிப் பெற்றோர் கருதுவாராயின் பிள்ளைகளுக்குச் சமயபோதனை தற்போது செய்துவரும் நேரத்தின் ஒருபகுதியைப் பெற்றோருக்குப் போதனை செய்வதிற் கழிக்கலாமென அவர் கருதுகிறார்.

### கருதினால் மசெல்லா காலமானார்

கருதினால்மாரின் மிக விருத்தாப்பியராக இருந்த கருதினால் அலோயிசி மசெல்லா அடிகளார் தமது 91ஆம் பராயத்தில் சென்ற வாரம் காலமானார் என்ற துக்க செய்தி எட்டியிருக்கிறது. கருதினால் சங்கத்தின் பிதா எனக் கருதப்படும் திசரன்ற் அடிகளாருக்கு இரண்டாவதான இடம் இவருக்குத் திருச்சடங்குகளின் போது அளிக்கப்பட்டு வந்தது. இவரது மரணத்தினால் கருதினால்மாரின் தொகை 128 ஆகின்றது. இவர் வகுத்துவந்த "சேம்பர்லேன்" பதவிக்குக் கருதினால் விலோ நியமிக்கப்பட்டிருக்கிறார், ஒரு பாப்பரசரின் மரணத்தின் பின்பு இராச்சிய பரிபாலன தலைவராக "சேம்பர்லேன்" கருதினால் கடமையாற்றுவது வழக்கம்.

## இலகுவாகச் சகிக்க முடியாத நிலைமை

தென் அமெரிக்க பிறேசில் தேசத்தவர் பெரும்பாலும் கத்தோலிக்கர். ஆனால் நாடு வறுமையில் துடிக்கின்றது. மக்களின் கேவல நிலைமையை நீக்கத் தீவிர நடவடிக்கைகள் எடுக்குமாறு அத்தேசக் குருமாரும், மேற்றிராணிமாரும் பிறேசில் அரசாங்கத்துக்கு இடித்துரைத்த வார்த்தைகள் அதற்குப் பிடிக்கவில்லை. அதனால், குருமார், மேற்றிராணிமார்கள் அரசாங்கத்தின் விரோதிகளாகித் துன்புறுத்தப்பட்டு வருகின்றனர். பிரபல்யம் பெற்ற அதிமேற்றிராணியார் ஹெல்டர் கமாரு அடிகளாரைப் பொதுஉடமைக் கொள்கைக்காரன் என நையாண்டி செய்கின்றனர். அந்நாட்டின் நிலைமையை நேரிற் சென்று பார்த்து வந்த ஒல்லாந்து தேசக் கருதினால் அல்பிறிங் அடிகளார், குருமார் துன்புறுத்தப்படுவதை "இலகுவாகச் சகிக்க முடியாத நிலைமை" என வர்ணித்திருக்கிறார். அங்கு தொண்டாற்றிவரும் மரியாயின் தியாகிகளின் சபைத் தலைவர் வத்திக்கானிடம் அத்தேசத்து இராஜிக உறவைத் துண்டித்துக்கொண்டால் ஒருவேளை புத்திவரக் கூடுமென விண்ணப்பித்திருக்கின்றார். மறு கிறிஸ்தவ நாடுகளும் இவ்விஷயத்தை ஐக்கிய நாடுகள் சபையின் ஆலோசனைக்குக் கொண்டுவரச் சிந்தித்திருக்கின்றன.

### ஆசிரியரது கருமங்களில் பெற்றோர் தலையிடுதல் கூடாது

"பள்ளிக்கூடங்களில் தம் பிள்ளைகளுக்குக் கல்வியூட்டும் ஆசிரியருடன் பெற்றோர் தொடர்பு கொண்டிருப்பது நன்மையைப் பயக்குமெனினும், ஆசிரியரது வேலைகள் நியமனங்கள் முதலியவற்றில் மிதமிஞ்சிய முறையில் தலையிட்டுக் கொண்டால் அது அவர்களது பிள்ளைகளின் படிப்பையே பாதகமாக்கும்" என வத்தளைப் பகுதி ஆட்சிமன்ற அங்கத்தவராகிய ஏ. டி. ஜே. லீயோ அவர்கள் அப்பகுதியிலுள்ள மத்தமகல் மகா வித்தியாலய விஞ்ஞான கூட நிறுவன வைபவத்தில் எடுத்துக் கூறினார், ஆசிரியர் நியமன வேலை ஒரு சிக்கலான வேலை எனவும், அதற்கென நியமிக்கப்பட்ட குழுவினராலேயே அது திருப்திகரமாகச் செய்யப்படக்கூடுமென்றும் எடுத்துக் காட்டினார்.

## வேதசாட்சிகளின் புனிதபட்டம் ஒற்றுமை இயக்கத்துக்கு எதிரானதல்ல

அண்மையில் 40 ஆங்கில-வேல்ஸ்தேச வேதசாட்சிகளுக்குப் பரிசுத்த தந்தை புனித பட்டம் அருளியதை அங்கிளிக்கன் சபையைச் சேர்ந்த சிலர் விரும்பவில்லை. கிறிஸ்தவ சபைகளின் ஒற்றுமையைப் பலப்படுத்த முயற்சிகள் எடுக்கப்படும் இந்த நாட்களில் கத்தோலிக்கருக்கு அக்காலத்தில் செய்யப்பட்ட அநீதியை எடுத்துக் காட்டுவது புத்திசாலித்தனமன்று என்று பலர் எடுத்துக் காட்டியிருந்தனர். இவர்களது பிழையான எண்ணங்களைத் திருத்தும் பான்மையில் லிவர்ப்பூல் அதிமேற்றிராணியாராகிய பெக் அடிகளார் விளக்கம் கொடுத்திருக்கின்றார். அதன் சாரம் பின்வருமாறு: புனித பட்டம் வேதசாட்சிகளுக்கு அளிக்கப்பட்ட நோக்கம் இக்கால மக்களுக்கு வேத விசுவாசத்துக்காக நாம் தியாகம் செய்யத் தயங்கப்படாதென்பதை எடுத்துக் காட்டுவதற்காகவேயாம். வேத விசுவாசம் தளர்ந்துவரும் இக்காலத்தில் வேதசாட்சிகளை எடுத்துக்காட்டாக மகிமைப்படுத்துவது மிகவும் பொருத்தமாகக் காணப்பட்டது. கிறிஸ்தவர்கள் தம் வாழ்க்கையில் கஷ்டங்களையும் துன்பங்களையும் தேவனுக்காக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதை இவ்வைபவம் வற்புறுத்துகின்றது. எவரது மனதையும் புண்படுத்துவதற்காக இது நடந்தேறவில்லை என பெக் அடிகளார் எடுத்துக் காட்டினார்.

### சினிமா நடிகை துறவினியானார்

7 வருடங்களின் முன் அமெரிக்காவில் சினிமாத் தொழிலுக்குப் பெயர் பெற்ற ஹொலிவூட் பட்டணத்தில் சினிமாநடிகைகளில் உயர்வரிசையில் கணிக்கப்பட்ட டொலோறஸ் ஹாட் என்னும் பெண்மணி அக் கீர்த்திவாய்ந்த சீவியத்தை உதறித்தள்ளி பெத்லஹெம் பட்டணத்திலுள்ள புனித ஆசீர்வாதப்பர் கன்னியர் மடத்தில் 1963ஆம் ஆண்டு சேர்ந்து இன்று உலகை முற்றுந் துறந்த கன்னியாஸ்திரியாக விளங்குகின்றார். அங்கே அவரை டொலோறஸ் தாயார் என அழைக்கின்றனர்.

### "வானொலியில் திருப்பலி பூசை"

கார்த்திகை மாதம் 15-ந் தேதி 3-ம் ஞாயிறு, காலை 7-30 முதல் 8-15 வரை,

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்திலிருந்து ஒலி பரப்பாகும்.

பூசைப்பலி ஒப்புக்கொடுப்பவர்: வண. பிதா பொஸ்கே பெரேரா ஓ. எம். ஐ.

பிரசங்கம்: வண. பிதா, றெஜிஞோள்ட், ஏபிரகாம் ஓ. எம். ஐ.

பாடகர்: புனித அந்தோனியார் சங்கீதக் குழுவினர்;

தயாரிப்பு: சங், சகோதரர் தோமாஸ் பெர்ணாண்டோ, ஓ. எம். ஐ.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் தண்டனை அளிக்கலாமா?

மொழிபெயர்த்தெழுதியவர்: "இரா செழியன்"

அடியைப்போல் அண்ணன் தம்பி உதவமாட்டார் என்பது நம் நாட்டுப் பழமொழி. தனது பிரம்பை மறைக்கிறவன் தன் பிள்ளைக்குத் துரோகம் செய்கிறான் என்று விவிலிய நூலிற் காணப்படுகிறது. பள்ளிக்கூடங்களில் ஒரு மாணவனை எப்போது, எவ்வாறு தண்டிக்கலாமென்னும் வினா நீண்ட காலமாகக் கேட்கப்பட்டு வருகிறது.

சில வேளைகளில் சாதுவான ஆசிரியர்கள்கூட மாணவர்களைத் தண்டிக்க வேண்டும் என்று கருதிக்கொள்கிறார்கள். சரீரத் தண்டனை அளிக்க அதிகாரம் வேண்டுமென்று கூறுகிறவர்களும் உண்டு.

தங்கள் பிள்ளைகளைப்பற்றிப் பெற்றோர்கள் சரிவரப் புரிந்துகொள்ளுவதில்லை. தவறு இழைக்கும் மாணவனுக்குச் சரியான நேரத்தில் அவனது கன்னத்தில் ஓர் அறை கொடுத்தால் அது பெரிதும் நன்மை விளைவிக்கும் என்றும், சோம்பேறிகளான மாணவர்களைத் தண்டனையின்றிப் படிப்பிக்க முடியாதென்றும் கருதுகிறார்கள்.

சில வேளைகளில் மாணவர்கள் ஆசிரியராலும் பெற்றோர்களாலும் இருமடியாகத் தண்டிக்கப்படுவதுமுண்டு.

ஆசிரியர்கள் யாவருக்கும் மாணவர்களுக்குத் தண்டனை கொடுக்கவேண்டுமென்பது விருப்பமல்ல, ஆனாலும் தண்டனையைப்பற்றிய பிரச்சனை இருக்கத்தான் செய்கிறது.

சரீரத் தண்டனை அல்லாத ஏனைய தண்டனைகளைக்கொண்ட அட்டவணையொன்றை, இன்ன குற்றத்திற்கு இன்ன தண்டனை என விபரமாக விளக்கித் தயார்செய்து வைத்திருந்தால் அது நன்மை பயக்கலாம். இது இன்ன குற்றத்திற்கு, இன்ன தண்டனை கிடைக்குமென்று மாணவர்களை அறியச்செய்கிறது. ஆசிரியர்களை வெறுக்கவும் நியாயமில்லை. மாணவர்கள் செம்மைப்படவும் வழியுண்டு.

மூன்று மாணவர்கள் ஒரு நாள் வகுப்புக்குச் செல்லாமல் படம் பார்க்கச் சென்றிருந்தார்கள். இவர்களில் முதலாமவனுக்கு இந்த எண்ணம் உதயமாயிற்று. இரண்டாம் ஆள் சிறிது பயந்தவனான காரணத்தால் முதலாமாளின் எண்ணத்திற்கு இணங்கினான். ஆனால் மூன்றாம் ஆளோ பாடத்தை விரும்பாத காரணத்தால் அவர்களோடு சேர்ந்துகொண்டான். இம் மூவருக்கும் ஒருவகையான தண்டனை கொடுக்கலாமா? கொடுக்கக்கூடாதென்றே சொல்லுவீர்கள். நீதிமன்றங்களில் குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிக்கும் நீதிபதிகள் குற்றத்தின் கனாகனம், குற்றம் செய்தவனின் பொறுப்பு, அவனுடைய குணம் முதலானவற்றை ஆராய்வார்கள். பாடசாலைகளிலும் அவ்வகையான முறையைக் கைக்கொள்வது நலமாகும்.

நீதியைச் செய்வது போதாது. நீதி செய்யப்படுவதாக உணரப்படவும் வேண்டும். ஒரு மாணவனுக்குத் தண்டனை அளிக்கப்படும்போது அத் தண்டனை அவனைத் திருத்துவதற்கு உபயோகப்படுத்தவேண்டும். மாணவர்களின் பொது அபிப்பிராயத்திற்கு மாறான தண்டனை விதிக்கப்படும்போது மாணவர்கள் ஆசிரியர்களை விரோதிக்கிறார்கள். எத்தச் செயலும் ஓர் அடையாளத்தினால் பிரதிபடுத்தப்படுகிறது. ஆசிரியர் மிகக் கடினமானவராய் கடும் தண்டனைகளைக் கைக்கொள்பவராய் இருந்தால் அவை மாணவர்களின் மனதில் ஒருவித வெறுப்புணர்ச்சியை வளர்த்துக்கொண்டு வரும். கடுமையாகத் தண்டிக்கப்படும் மாணவன் தனக்குச் செய்யப்படுவது அநியாயமெனக் கருதுகிறான். சில வேளைகளில் இவ்வகையான செயல் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஒரு போரைத் தொடக்கிவிடுகிறது. அற்பமான அநீதி பெரிய கெடுதிகளை விளைவிக்கக்கூடியதாயிருக்கிறது.

ஆசிரியர்களுக்கு அதிக அதிகாரம் வழங்கவேண்டுமென்பது பிரதான எண்ணமல்ல. மற்றவர்களால் கொடுக்க முடியாததும், ஆசிரியர்களிடமிருந்து எடுக்க முடியாததுமான ஒரு விசேட குணம் ஆசிரியர்களிடம் இருக்கவேண்டும். சகலத்தையும் விளங்கிக்கொள்ளக்கூடிய ஞானமே அது. ஆசிரியர்கள் வகுப்புகளில் ஞானிகளாகத் திகழவேண்டும். தவறுகள் செய்யப்படும்போது அவற்றைப்பற்றிய தெளிவான விளக்கம் ஆசிரியர்களுக்கு இருக்கவேண்டும்.

வகுப்பில் ஒரு மாணவன் மெல்லிய குரலில் ஆசிரியரைக் கேலிசெய்யலாம். அதை ஆசிரியர் தெரிந்தும் தெரியாதவர்போல் காட்டிக்கொள்ளலாம். வேறொரு மாணவன் அயலிலுள்ள தனது நண்பனுடன் உரையாடிக் கொண்டிருக்கிறான். அதைக் கண்டும் காணாதவர்போல் நடந்துகொள்கிறார். மூன்றாம் மாணவன் ஏதோ சொல்கிறான் ஆசிரியரால் சகிக்கமுடியவில்லை; மாணவனின் முதுகைப் பதம் பார்க்கிறார், அல்லது அவனை வெளியே அனுப்புகிறார்.

மாணவன் வகுப்பில் கவனம் செலுத்தாமல் இவ்வாறு நடந்துகொள்வதற்குரிய காரணங்களை ஆசிரியர் ஆராய்கிறாரா? அவரது படிப்பித்தல் முறை சுவையற்றிருக்கலாம். பெரும்பாலான மாணவர்களுக்குப் படிக்கவேண்டும் என்ற எண்ணம் உள்ளூர உண்டு. அதனால் அமைதியை அவர்களும் விரும்புகிறார்கள். ஆனால் ஆசிரியரின் போதனை சுவையற்றதாய், கறியில்லாத சோறுபோல் இருந்தால் மாணவர்கள் அமைதியாக இருக்கமுடிவதில்லை. மாணவர்களின் முகபாவத்திலிருந்து அல்லது அவர்களின் குறிப்புகளிலிருந்து அவர்கள் களைப்படைகிறார்கள் என்பதை ஆசிரியர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். நகைச்சுவைமூலமோ அல்லது தகுதியான வேறு வழிகளைக் கையாண்டோ ஆசிரியர் மாணவர்களின் கவனத்தைக் கவரவேண்டும்.

மாணவர்கள் தவறு செய்யும்போது அத் தவறுக்குக் காரணமுண்டு. அக் காரணம் நியாயமற்றதாக இருந்தால் மாணவர்கள் அவ்வாறு நடந்துகொள்வதற்கு அவர்களைத் தூண்டும் ஊக்கசக்தி என்ன என்பதை அறியவேண்டும். அதனை அறிந்துகொள்ளாமல் மாணவர்களைத் தண்டிப்பதால் எதுவித பயனுமில்லை.

கல்வி போதித்தலில் இரு நோக்கங்களுண்டு. முதலாவது மாணவர்களைச் சமுதாயத்தில் தகுந்தவர்களாக்குவது, இரண்டாவது வகுப்பை அமைதியாக நடத்துவது. வகுப்பை அமைதியாக நடத்த வேண்டுமென்ற எண்ணத்தினால் ஆசிரியர்களனேகர் முதலாவது நோக்கத்தை மறந்துபோகிறார்கள். இதன்காரணமாக ஆசிரியர்கள் அளவுக்கு மிஞ்சித் தண்டனை கொடுக்கப் புறப்படுகிறார்கள்.

மாணவர்களை வகுப்பிற்கு வெளியே அனுப்பும்போது முதன்முதலாக வெளியே செல்வதற்குப் பயந்த மாணவர்கள், வெட்கமடைந்தவர்கள், கூச்சப்பட்டவர்கள் காலகதியில் அடிக்கடி வெளியே அனுப்பப்படும்போது இவைகளெல்லாவற்றையும் இழந்துவிடுகிறார்கள். தம்மை வீரர்களாகக் கருதுகிறார்கள், தமக்கு விடுதலை கிடைத்துவிட்டதென மகிழ்கிறார்கள். தலைமை ஆசிரியரைச் சந்தித்தாலும் அவர்கள் பயப்படுவதில்லை. தாம் வெளியில் தள்ளப்பட்டதை வீரச்செயல்மாதிரிக் கூறுகிறார்கள். பாடசாலை வளவுக்குள் திரிந்து, ஈற்றில் புகைத்தல் முதலிய தீய பழக்கங்களுக்கு ஆளாகிறார்கள். இப்படிப்பட்ட மாணவர்களுக்குத் தண்டனை கொடுப்பதென்றால் அவர்களுக்குப் பெரிய தண்டனை கொடுக்கவேண்டி இருக்கும். மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமுள்ள சினேக உறவு, அறவழி, அன்பு பாதிக்கப்படுகிறது. ஒருவரை ஒருவர் சரிவரப் புரிந்துகொள்ள மாட்டார்கள். மாணவர்கள் ஆசிரியர்களை வெறுக்கத் தொடங்குகிறார்கள். ஆசிரியர்களதும் மாணவர்களதுமுறவைப் பாதிப்பதனால் தண்டனை எதுவுமில்லை. இவ்வகையான ஆசிரியர்களிடம் பிடிபட்ட மாணவர்கள் மழைக்குள் நனைந்தவர்களைப்போல் தங்கள் விதியை நொந்துகொள்கின்றனர். தங்கள் வகுப்பை ஒருவித சிறைச்சாலையாக எண்ணுகின்றனர். படிப்பதில் வெறுப்புண்டாகின்றது. இவைகளை உற்று நோக்கும்போது மாணவர்களை வெளியே அனுப்புவது நன்மை பயக்குமென்பதை அறிந்தால் அல்லாமல் ஒரு பொழுதும் கையாளல் கூடாது. வகுப்பறையில் படிக்கவேண்டிய மாணவர்களை வெளியில் அனுப்பிக் கண்ட பயன் என்ன? —வளரும்

## சம்பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம்

## பிரவேச விண்ணப்பம்—1971

1. பின்வரும் வகுப்புகளில் மாத்திரம் இடவசதியுண்டு.

| | |
|---|---|
| 1ஆம் வகுப்பு | (1-6-65—31-12-65) |
| 3ஆம் வகுப்பு | 31-12-62 |
| 4ஆம் வகுப்பு | 31-12-61 |
| 6ஆம் வகுப்பு | 31-12-59 |
| 9ஆம் வகுப்பு | 31-12-57 |
| 10ஆம் வகுப்பு | 31-12-56 |
| 11ஆம் வகுப்பு | 31-12-54. |

2. அனுமதிகோரும் மாணவன் வகுப்புக்குரிய குறிப்பிட்ட திகதிக்குப்பின் பிறந்தவனாக இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பப்பத்திரங்கள் 27 – 11 – 70 க்கு முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் செய்யும் பத்திரங்கள் கல்லூரிக் காரியாலயத்தில் பள்ளிக்கூட நாட்களில் காலை 9-15 இல் இருந்து 10-15 மட்டும் நேரே வந்து கேட்பவர்களுக்குக் கொடுக்கப்படும்.
4. பிரவேசப் பரீட்சைத் தினம் 1-12-70 (3, 4, 6, 9, 10, 11 வகுப்புகள்.)

சுவாமி மதுரநாயகம்,
கல்லூரி அதிபர்.

7-11-70

● பரிஸ்நகரிலுள்ள புரூசாயிஸ் ஆஸ்பத்திரியிலே 50 வயதுடைய ஓர் இருதய நோயாளியின் மார்பினுள் அணுச்சக்தி பற்றறி ஒன்றை வைத்துப் பொருத்தி அந்நோயாளியின் இருதயம் ஒழுங்காக இயங்கச் செய்து விடப்பட்டிருக்கிறது. இந்த அபூர்வ சத்திர சிகிச்சையை முதன் முதலாக நடத்தியவர் பேராசிரியர் பிவ்னிக்கா என்பவரே. வைத்தியத்துறையில் இருதய நோய்க்கு அணுச்சக்தி பயன் படுத்தப் பட்டிருப்பது இதுவே முதன் முறையாகும்.

✠

திருமதி கிறிஸ்ரீனா யோசவ் அவர்களின்

### முதல் வருட நினைவு தினம்

பிறப்பு: 29-6-1911 இறப்பு: 12-11-1969.

இவருடைய ஆன்ம சாந்திக்காக இம்மாதம் 12-ம்திகதி காலை 6-15 மணிக்கு யாழ்ப்பாணம் கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் பூசைப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரது பிரிவால் துயருறுவோர், கணவன், மக்கள், பேரர், மச்சாள்.

18 கார்மேல்வீதி,
யாழ்ப்பாணம்.

### அயர்லாந்துக் குருவானவர் ஆபிரிக்க இனத் தலைவரானார்

சென்ற 14 வருட காலமாக ஆபிரிக்காக் கண்டத்தில் தேவதொண்டாற்றி வந்த அயர்லாந்துதேசக் குருவானவராகிய வணக்கத்துக்குரிய படி கிலி சுவாமியார் ஒரு சிறு ஆபிரிக்க இனத்தின் தலைவராக அவர் அண்மையில் தொண்டாற்றி வந்த ஐறீல் என்னும் கிராமத்தில் தெரிந்து எடுக்கப்பட்டிருக்கிறாரென நைஜிறியாவிலிருந்து கிடைத்திருக்கும் செய்திகள் கூறுகின்றன.

● இருதய நோயாளருக்கு இதுவரை பயன் படுத்தப் பட்டுவந்த மின் பற்றறிகள் இரண்டு வருடங்களுக்கு மட்டுமே நின்றுபிடிக்கக் கூடியன. அதன்மேல் மறு சத்திர சிகிச்சைமூலம் புதிய பற்றறிகள் பொருத்தப்பட்டு வந்தன. ஆனால், இந்தப் புதிய அணுச்சக்தி பற்றறிகளோ 15 முதல் 20 வருடங்களுக்கு நின்றுபிடிப்பதுடன் விலையும குறைந்தனவாகும்.

● திருக்குழந்தை யேசுவின் மிஷனரிய சபையைச் சேர்ந்த ஐரிஷ் சாதியினரான சங். லெயோனாட் கன்னியாஸ்திரி மலேசியாவிலே பீனாங் நகரில் அன்று சனிக்கிழமை தமது கன்னிகா அந்தஸ்தின் 50ஆம் வருடத் தங்கயூபிலி விழாவைக் கொண்டாடினார். இவர் தனதுகன்னிகா வாழ்க்கைமுழுவதையும் பீனாங்கிலேயே செலவிட்டிருக்கின்றார். அதேசபையைச்சேர்ந்த இவருடைய சகோதரியான சங். டிம்ப்னா கன்னியாஸ்திரி இங்கிலாந்தில் லேபிறிட்ஜ் நகரில் பணியாற்றிவருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் உலகு



### அன்புநிறை சோதர, சோதரிகட்கு:

'நேரம் பொன்போன்றது.' 'நேரத்தை வீணாக்குதல் தற்கொலைக்குச் சமன்' என்று பெரியோர் கூறியுள்ளனர். வாழ்வில் முன்னேறியவர்கள் எல்லாம் தம் நேரத்தைக் கண் போற் காத்து, பொன்போல் பேணியவர்களே. இதோ ஒரு சம்பவம்; ஒருவன், பெஞ்சமின் பிராங்ளினின் பத்திரிகை அலுவலகத்தை சிலமணிநேரம் பார்வையிட்டபின் அங்குள்ள புத்தகம் ஒன்றை எடுத்து 'விலை என்ன' என்றான். ஒரு டாலர் என்று கூறினான் விற்பனையாளன். குறைக்க முடியாதா என்று கேட்க, ஒரு டாலர்தான் என்று பதிலிறுத்தான் விற்பனை யாளன். ஏனைய புத்தகங்களை ஒருமுறை பார்த்துவிட்டு பிராங்ளின் இருக்கிறாரா என்றுகேட்க, ஆம் அவர் அச்சக அறையில் வேலைசெய்கிறார். அவரைப் பார்க்கவேண்டும் என்று கூறவே, முடியாது என்று மறுத்தான் விற்பனையாளன். பிராங்ளின் வெளியே வந்தார். இப்புத்தகத்தின் கடைசிவிலை என்ன என்றான் பிராங்ளினிடம். ஒன்றேகால் டாலர் என்றார் பிராங்ளின். 'என்ன! விற்பனையாளன் ஒரு டாலர் என்றுதானே கூறினான் என்றான் அவன். 'ஆம் நான் என் வேலையைவிட்டு வந்திருக்கிறேன்' என்றார். அதெல்லாம் சரி; இப்போது இதன் விலையைக் கூறுங்கள், 'ஒன்றரை டாலர்' என்றார். ஒன்றேகால் டாலர் என்றுதானே கூறினீர்கள்? ஆம் அப்போது அதைத் தந்திருந்தால் கொடுத்திருப்பேன். அப்போது அந்தவிலை; இப்போது இந்த விலை. அவன் அமைதியாக ஒன்றரை டாலரைக் கொடுத்துப் புத்தகத்தை எடுத்தான். புத்தகத்தில் உள்ளதைவிட மேலான ஒரு பாடத்தைக் கற்றுக்கொண்டான். நேரத்தின் பெறுமதி எப்படியிருக்கிறது? இளைஞரே! இளைஞர் உலகைச் சிறப்பிக்க உங்களுக்கிருக்கும் ஆர்வத்தை விடயதானங்கள்மூலம் அறியமுடிகிறது. நேரத்தின் மேன்மையை அறிந்தோமல்லவா? இது கார்த்திகை மாதம். ஆத்துமாக்களுக்காக மன்றாடும்விசேடநாட்கள் இவையல்லவா? மறந்துவிடாதீர்கள். மீண்டும் சந்திக்கும்வரை அனைவருக்கும் நன்றிகள்.

— சோதரன்

## கைகொடுப்பாயா? கரை சேர்ப்பாயா?

— இ. பேர்ணாட்

கார்த்திகை தனிலே நீத்தார் நினைவு. கார்த்திகை மாதம் நினைவுகூரும் மாதம். உலக வாழ்வில் உளமார நேசித்தவர்களை மறந்துவிடுவோமென எண்ணிய நம் அன்னையாம் திருமறை ஒருநாளில் அவர்களுக்கு விழாஎடுத்து ஒரு மாதத்தையே அவர்களுக்கு அர்ப்பணித்து அனுதினமும் அவர்களுக்காக மன்றாடும்படி கேட்கிறது. "பாவங்களிலிருந்து விடுதலை அடையும்படி மரித்தவர்களுக்காக வேண்டிக்கொள்வது புனிதமும் பயனுள்ளதுமான எண்ணமாயிருக்கிறது" (2மக்க. 12:46).

கைகொடுப்பாயா? கரை சேர்ப்பாயா? ஆன்மாக்களின் அவலக்குரல் அவனியெங்கும் ஒலிக்கிறது. பண்புடன் பழகிய நண்பா! உன்உயிர் நண்பனை என்னை இன்று மறந்து போனாயா? கண்ணீர் சிந்துகிறேன்; கவலையின்றி வாழ்கிறாய் நீ; கருகி வாடுகிறேன் நான்; உருகாதுபோனாய் நீ. இப்போதாவது என் கண்ணீரைத் துடைப்பாயா? கைகொடுப்பாயா? கரை சேர்ப்பாயா?

அருமை மகனே! அருமை மகளே! அம்மா அப்பாஎன்று அன்புததும்ப அழைத்தீர்களே. துன்பத் தீயில் துடியாத்துடித்துத் துன்பம்துய்க்கின்றோம். எம்மைப் பிரிந்தீர்கள், அழுது புலம்பினீர்கள். எம் உடலைப் பெட்டியில் வைத்துக் கட்டியபோது ஐயோ என்றழுதீர்கள். இட்ட நின்றோரைக் கட்டியணைத்து அழுதீர்கள். ஐயோவென அக்கினியில் நாம் அலறும் ஓசையைக் கேட்க உங்கள் காதுகள் செவிடாகி விட்டனவா?

ஆம், இப்படியே இங்கு வேதனைப்படும் அன்பர், நண்பர், உபகாரிகள், ஆசிரியர், ஞானமேய்ப்போர் அனைவரும் அனுதினமும் அவலக்குரல்எழுப்புகின்றனர். ஆனால் இவற்றைக்கேட்க எம்காதுகள் ஞானச்செவிடாகி விட்டன. ஆகவே, என் நண்பர்களாகிய நீங்களாகிலும் என்மேல் இரக்கம் காட்டுங்கள். ஏனெனில் ஆண்டவரின் கரம் என்னைத் தொட்டுவிட்டது (யோபு 19:21). ஆன்மாக்களில் பலர் வேதனைகளிலிருந்து விடுதலை அடையும் நிலையில் உள்ளனர். அவர்களுக்கு வேண்டியது ஒரு சிறு திருப்பலியாக இருக்கலாம்.

ஆனால் இந்தத்திருப்பலியைச் செய்துவைக்க அநேக ஆண்டுகள்கூட ஆகலாம். ஆனால், அந்த ஆன்மா மறக்கப்பட்டுவிட்டால்......

திருமறையின் ஒருபகுதியான வேதனைப்படும் சபைதான் உத்தரிப்புஸ்தலம். துன்பம் எத்தகையது நாமறிவோமா? உலகில்உள்ள மிகப்பெரிய துன்பம்தானும், உத்தரிப்புஸ்தல மிகச்சிறிய வேதனைக்கு ஈடாகாது என்று வேதவிற்பன்னர் கூறியுள்ளனர். இவ்வுலக துன்பங்கள் பொது[illegible] அவைகளோ

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## நேயர் குரல்

கனம் ஆசிரிய,

தங்கள் பத்திரிகையில் புதிதாக இடம்பெற்றுள்ள "இளைஞர் உலகு" எனும் பகுதியில் பிரசுரமாகும் விடயங்கள்யாவும் மிக மிக அருமையானது. அதிலும் சென்ற 24-10-70 இல் வெளிவந்த இளைஞர் உலகு மிக்க நன்றாக இருக்கிறது. படிக்கப் படிக்கச் சுவையாக இருக்கிறது. விடயங்கள் விறுவிறுப்பாக இருக்கிறது. மீண்டும் மீண்டும் வாசிக்கத் தூண்டுகிறது. நிச்சயம் தற்கால இளைஞர்களுக்கு ஊக்கம்தரும் பகுதி. இளைஞர்களைத் தன்பக்கமாக இழுத்து இறைபணிக்கு அழைக்கும் ஓர் அவுடதம். இது பல்லாண்டு வாழவேண்டும். வளரவேண்டும். நல்ல பயன் தரவேண்டும். இஃது பல்லாண்டு பல்லாண்டு வளர்ந்து பயன்தர இறைவனைப் பிரார்த்திக்கிறேன். வளர்க இதன் பயன்! வாழ்க இதன் புகழ்!!

இங்ஙனம், கீழ்ப்படிவுள்ள
இராசேஸ்வரி.

தும்பளை

## சிந்தனைத் துளிகள்

பெருந்தன்மையை மூன்று அறிகுறிகள்மூலம் தெரிந்து கொள்ளலாம். தோற்றத்தில் எளிமை; செயலில் மனிதத் தன்மை; வெற்றியில் வெறியின்மை. —பிஸ்மார்க்

தலைசிறந்த தலைவாயிலினால் சொர்க்கத்தில் பிரவேசிக்க விரும்புகிறவன், முதலில் தனது தாய் தந்தையரை மகிழ்விப்பானாக. —நபிநாயகம்

வாழ்க்கை என்பது போராட்டம்; வாழ்க்கை என்பது வேள்வி; வாழ்க்கை என்பது கடல். தீயில்லாத வேள்வி இல்லை; புயலில்லாத கடல் இல்லை. இவற்றைஎல்லாம் சிரித்தமுகத்தோடு ஏற்றுக் கொள்பவனுக்குத்தான் வாழ்க்கையின் உண்மையானகருத்து விளங்கும்

— வி. ஸ. காண்டேகர்

பத்துத்தடவை நீ கீழே விழுந்தாலும் நம்பிக்கையை இழந்துவிடாதே; நூறு முறை விழுந்தாலும் மனந் தளராதே; ஆயிரம்தடவை விழுந்தாலும் எழுந்து தைரியமாக நட; தோல்விகள் இல்லாமல் ஜெயம் வருவதில்லை. தோல்வியே ஜெயத்திற்குப் போகும் பாதையில் பதிக்கப் பெற்ற படிகள்.

—சுவாமி சிவானந்தா

தொகுத்தளிப்பவர்:
ஆ. இராசேஸ்வரி — தும்பளை

## வாழ்க்கை வாழ்வதற்கே

இளைஞன் தற்கொலை; பருவப்பெண் நஞ்சருந்தி மரணம்; கழுத்தில் சுருக்கிட்டு கன்னி தற்கொலை, காதலில் தோல்வி காளை தற்கொலை; ஆம் அன்றாடத் தினசரிகள் தம் கடமையில் தவறாது கொட்டை எழுத்துகளில் நமக்கு அளிக்கும் செய்திகள் இவை: இத்தகைய இளம் உள்ளங்களிடையே ஒருபிற்போக்கான நிலைமை இருக்குமாயின் இளைஞர் உலகு முன்னேறுவது எப்படி? பத்திரிகைகளுக்கு இவை நல்ல செய்திகள் தான்! ஆனால், இதுபற்றிச் சிந்தித்தாலோ இளைஞர் உலகு கண்ணீர்க் கடலில் மிதக்க வேண்டியது தான்.

வாழ்க்கையின் உன்னத லட்சியங்களை அதன்புனிதத் தன்மையை நன்றாக உணராதபடியால்தான் இத்தகையதொரு இழிவான முடிவை நாடுகின்றனர். கனியிருப்பது ரசம்பருக, மலர் இருப்பது மணம் நுகர, வாழ்வு இருப்பது வாழ்வாங்கு வாழ; இதை நாம் மறந்து விடுகிறோம். மரங்களில் தோன்றும் இலைகளைப் போன்றது வாழ்க்கை; வாழ்வு ஒரு நடமாடும் நிழல், வாழ்வு என்பது புகைப்படலம்; வாழ்வைக் குடங்கவிழ் நீரோடமென்றேயிரு: இவை யாவும் உண்மைதான்: ஆனால், உழைப்பு துக்கம், மகிழ்ச்சி இம்மூன்றையும் அனுபவிக்கப் பிறந்தவன் மனிதன். இம்மூன்றும் இல்லாத வாழ்வு சரியான வாழ்வாகாது: வாழ்க்கைபற்றி வள்ளுவப் பெருந்தகை கூறியதையும் நாம் கவனிக்க வேண்டும்.

வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள்வைக்கப்படும்.

உண்மைதான் வாழ்வாங்கு வாழ்ந்தவன் தெய்வம். வாழ்க்கை என்பது ஊஞ்சலில் உட்கார்ந்து ஊசல் ஆடுவது அல்ல புயலுக்கு நடுவே படகைச் செலுத்துவதுதான் வாழ்க்கை. 'எனக்காக நான் வாழ்கிறேன் என்ற எண்ணம் போய் மற்றவர்களுக்காக நான் வாழ்கிறேன் என்ற எண்ணம் எவனிடம் உதயமாகிறதோ அவனின் வாழ்க்கைதான் உண்மையான வாழ்க்கை' என்று பெரியார் ஒருவர் கூறியதும் நோக்கற்பாலது.

தனக்கென வாழாது பிறர்க்கென்று வாழ்பவனே மனிதன். அவனது வாழ்க்கையே வாழ்க்கை. இது தான் இயற்கையோடியைந்த இன்பவாழ்வு. மனித உடல் தாங்கி விலங்கின் வாழ்வு நடாத்துதல் இழிவு.

எவர் புகழ் பெறத்தக்க செயல் எதையும் செய்யவில்லையோ அவர் வாழ்ந்திருந்தும் இறந்தவருக்கு ஒப்பாவார். கல்வி அறிவு பெறாதவர் கண்கள் படைத்தவராக இருந்தாலும் குருடர்தான். பிறர்க்கு துன்பம் ஏற்படும்போது முன்வந்து உதவாதோர் வாழ்வு ஆண்மையற்ற அலியின் வாழ்வுதான்.

மாளப் பிறந்த இல்லை, வாழப் பிறந்த—புவி ஆளப் பிறந்த இளைஞரே சிந்தியுங்கள்! வாழ்க்கை வாழ்வதற்கா? அன்றி மாள்வதற்கா?? மகத்துவம் வாய்ந்த இளமைப் பருவத்தைப் பாழாக்கும் பழிச்செயலுக்கு இளைஞர் உலகு இலக்காக வேண்டுமா? வேண்டாம் வேண்டாம். இளைஞர் உலகிற்கு இழுக்கு வேண்டாம் வாழுங்கள்; எம் வாழ்வு வளமானதாகட்டும். வளமாக வாழ்வோம். ஏனையோரையும் வாழ்விப்போம்; வாழ்க்கை வாழ்வதற்கே, அது ஆக்கம் பெற நல்லஊக்கமும் வேண்டும்; ஒரு நோக்கமும் வேண்டும். சிந்தியுங்கள் சிறந்ததோர் வாழ்வு உருவாகும்.

## கடவுள் இருக்கிறார்

— வனஜா சிங்கராயர் —

பாபுவிற்கு ஒரே எரிச்சல். புதுப்படத்திற்குப் போக வேண்டும். கையிலோ காசு இல்லை. வீட்டிலோ தருவாரில்லை. வீட்டிற்குத் தேவையான பொருட்கள் வாங்குவதற்கே பாபுவை நம்பி பரம் பைசா தராதவர்கள் படம் பார்க்கவா காசு தருவார்கள்.

என்ன செய்வான் பாபு. வீட்டைச் சுற்றிச் சுற்றிவந்து கொண்டிருந்தான். நேரம் ஓடிக்கொண்டிருந்தது. அவனுடைய மனமோ அன்று எப்படியாவது படம் பார்க்க வேண்டுமென்ற எண்ணியது. அப்பா குடையை விரித்து நடையைக் கட்டினார். அம்மா குடமேந்தி நடையிட்டாள் குழாயடியை நோக்கி.

தனித்திருந்தான் பாபு; சிற்சில தீய எண்ணங்களுக்கு வித்தாகும் தனிமை பாபுவிற்குக் கிட்டியது. அறையை நோக்கிச் செல்கின்றது அவனது கால்கள். ஆனால் அவன் கால்கள் தடுமாறுகின்றன. அவனுடைய மனச்சாட்சி அவனைச் செய்யாதே களவு! எடுக்காதே எனச் சொல்கிறது. ஆனால், அவன் தன் மனச்சான்றின் குரலொலிக்குச் செவிசாய்க்கவில்லை. அறைக்குள் சென்றுவிட்டான். அலுமாரியை நோக்கி அவன் கைகள் சென்றன. சர்ர் என்றஒலியுடன் அலுமாரி திறந்தது. வெளித்தட்டில் வரிசையாக அமர்ந்திருந்த இரு உண்டியல்கள் பாபுவை வரவேற்றன. திருயாத்திரை செல்ல வழிச்செலவுக்கெனச் சேர்த்திருந்த பணம்என்பது அவனுக்குத் தெரியும். ஆனால் அவன் மனம் படத்திலேயே லயித்திருந்ததால் வேறுஒன்றும் அவன் நினைவில் இல்லை. ஏதேனும் ஓர் உண்டியலில் காசு எடுக்கவேண்டும். ஒருவாறு முடிவுசெய்து உண்டியல்களை நெருங்கினான். கையில்வந்த உண்டியலை எடுத்து கவிழ்த்துக் குலுக்கினான். சற்றுநேரப் போராட்டத்திற்குப் பின் கலீர்என்ற ஒலியுடன் பளிச்சென்று ஓர் எட்டணா நாணயம் கீழே வந்து வீழ்ந்தது. பாபுவிற்கு ஒரே மகிழ்ச்சி. எடுத்தான் நாண

(தொடர்ச்சி 4-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசுவாசமில்லாத உழைப்பு

மனிதன் உழைக்கிறான். இரவு பகலாக உழைக்கிறான். ஏன் இவ்வளவு களைப்பு? ஏன் இவ்வளவு உழைப்பு? ஏன் இவ்வளவு இரத்தம் சிந்துதல்? பணத்திற்காகவா? வயிறு வளர்ப்பதற்காகவா? என்ன பரிதாபம்! என்ன விளங்காத்தனம்!! இம் முயற்சி மனிதனை மனிதனோடு போட்டியிட வைக்கிறது. சமூகத்தை சமூகத்திலிருந்து பிரிக்கிறது. தேசத்தைத் தேசத்தோடு மோத வைக்கிறது. சண்டை சச்சரவு! பகை பொறாமை!! ஏக்கம் இடிமுழக்கம், பரிதாபமான கொலைகள். இதில் இலட்சக் கணக்கான மக்கள் மடிகிறார்கள். பால் குடிமறவாப் பிள்ளைகள் சாம்பலாக்கப்படுகிறார்கள். இளங் குடும்பங்கள் நாசமாக்கப்படுகிறார்கள். வயோதிபர், வியாதிக்காரர் படுக்கையிலேயே கொல்லப்படுகிறார்கள். ஏன் இதெல்லாம்? இவையெல்லாம் விசுவாசமில்லாத உழைப்பின் பலன்தான். யார் கூட நிலம் பிடிக்கலாம்? யார் செழிப்பான பகுதியைக் கொள்ளலாம்? யார் எல்லோரையும் நாசமாக்கும் பணத்தை அதிகமாகத் தேடலாம்? இதுவே மதியில்லாத உழைப்பு! இதுவே மதிப்பில்லாத உழைப்பு!!

### மனிதன் உழைக்கவேணும்

உழைப்பதில் பிழையில்லை. ஆனால், உழைக்க முயலும் மனிதன் மிருகமாகக் கூடாது. உழைப்பினால் தனது மதியை இழப்பது தவறு. வேகமாகச் செல்லும் குதிரையைச் செலுத்துபவன் குதிரையைப் போல் வெறிகொள்ளக் கூடாது. வாகனம் எது, சாரதி எது என்ற வித்தியாசம் என்றும் உள்ளது. மதியை இழந்த மனிதன் மிருகமாகிறான். வீட்டுச்சீவியம் காட்டுச்சீவியமாக மாறுகிறது. நாகரீகம் அநாகரீகமாகிறது. எல்லோரும் அதிசயிக்கத்தக்கதாக மிருகமான மனிதன், ஞானத்தை இழந்து அஞ்ஞானத்தைப் பரவச்செய்கிறான். மிருகத்தன்மை வலுக்கொள்ளுகிறது. காற்றுப் புசலாகிறது. புசலை உண்டாக்கிய மனிதன் அதே புசலில் மடிகிறான். என்ன ஆச்சரியம்! தன்வினை தன்னைச்சுடுகிறதில் என்ன அதிசயம்!! உழைக்க வேண்டிய மனிதன் மனிதத் தன்மையை இழக்கக்கூடாது. தேர்ப்பாகனுக்கு குதிரையின் வெறிபிடித்தால் தேரோடு மடிவான்.

### பொதுவுடமையும் மதிப்பும்

அழியும் பொருளில் ஆவேசம் பிடித்தவர்கள் பொதுவுடமையை ஆதரிப்பார்கள். "மனிதன் அப்பத்தால் மாத்திரமல்ல கடவுளின் ஒவ்வொரு வார்த்தையாலும் சீவிக்கிறான்" என்றார் நம்மாண்டவராகிய யேசு. திருவள்ளுவரும் இதை ஒருவகையில் உணர்ந்தார். "செவிக்குணவில்லாத போழ்து சிறிது வயிற்றிற்கும் ஈயப்படும்." எப்படிச் செவியையும் வயிற்றையும் சமமாக்கலாம்? செவி கடவுளிடம் கொண்டு செல்லும் ஞானத்தைக் குறிக்கிறது. வயிறு அழியும் உடலைக் குறிக்கிறது. பொதுவுடமை பெருக்கும் செல்வமானது வயிறையே வளர்க்கக்கூடியது. ஆனால் ஞானம் நிறைந்த செவியோ மனிதனைத் தேவமக்களாகச் செய்கிறது. பொதுவுடமையின் மதிப்பு பொருளவு. கடவுளின் ஞானத்தைப் பெறும் மனிதனின் மதிப்போ கடவுளளவு. வியாதிக்காரனுக்கு ஆரோக்கியம் அளியாத கத்தியும், சிகிச்சை நிபுணரும், இருந்தென்ன இல்லாதிருந்தென்ன?

— பி. ஜே. அமிர்தநாயகம் —

### கருவியும் நித்திய மதிப்பும்

கடவுள் நித்திய மதிப்பு. அவரே அளவற்ற நன்மைத்தனமானவர். சகல படைப்புகளினதும் உன்னத இலட்சியம் அவரே. கடவுள் ஒருவரே சாந்தியும், சமாதானமும். அவரே எல்லோருக்கும் அமைதி அளிப்பவர். அவரில் சாந்தி அடையாதவர் மடியவே மடியவேண்டும். பொருளும் பொன்னும் கருவிகள். உழைப்பும் களைப்பும் கருவிகள். இவை கடவுளைக் குறிக்கோளாக வையாவிட்டால் எல்லாம் வியர்த்தம். கடவுளால் உந்தப்படாத மனிதனின் உழைப்பு உதரத்தில் பிள்ளையில்லாதவள் படும் பிரசவநோய்போல் தான் இருக்கும். ஏமாற்றமடையப் படாது. பொருட்களுக்குத் தங்கள் மட்டில் மதிப்பில்லை. என்றும் நிலையான மதிப்பின் உச்சமாகிய தேவனில் இருந்தே எதுவும் மதிப்பைப் பெறவேண்டும். கருவியாகவும் காரணமாகவும் இருக்கும் பொருள், எல்லோருடையதானாலும், அது தனிப்பட்ட மதிப்பைப் பெறுவதில்லை. நூறுபேர் இருக்கிறார்கள் என வைப்போம். ஒருவனிடம் நூறு கத்தி இருக்கட்டும்; அவனிடம் ஒரு கொலைக்காரனின் போக்கிருக்கிறதெனக் கருதுவோம். அவன் தனது கொலைப் போக்கையும் ஒவ்வொரு கத்தியையும் நூறு பேருக்குப் பங்கு செய்கிறான். கத்திகளைச் சமமாகப் பிரித்துக் கொடுப்பது, சகோதரத்துவம் என்போர் திருப்தியடைவார்களா? பொதுவுடமையை ஆதரிப்போர் இந்நூறு பேரின் சமூகத்தில் வாசஞ்செய்ய விரும்புவார்களா? இல்லை. ஏனெனில் எல்லோரும் கொலைகாரர். அன்பு அவர்களில் இல்லை. இதில் பொருளைப் பெறுவதே அபாயமாயிருக்கிறது. இவர்கள் ஒருவரிடத்து நூறு கத்தியையும் கொடுத்தாலும் அவர்களோடு வாழ அவர் விரும்பமாட்டார். ஏனெனில் அவர்கள் கொலைக்காரர். அன்பில்லாதவர்கள். அவனை வாழவும், வாழ்வின் சுதந்தரத்தைப் பெறவும் விடமாட்டார்கள். இதுவே நித்திய மதிப்பில்லாத கருவியின் பலாபலன்.

### சிலுசிலுப்போ பலகாரமோ?

முயற்சி நல்லது, உழைப்பு பாராட்டவேண்டியது. தொண்டர்களைச் சமூகமும் பாராட்டுகிறது. ஆனால் எல்லாம் நன்மைக்காக இருந்தால்தான். மனிதனின் இலட்சியம் பொருளாக இருக்க முடியாது. ஏனெனில் அதற்குத் தன்மட்டில் தனி மதிப்பில்லை. அது நல்ல கருவியாய் இருந்தால் அதுவும் விரும்பத்தக்கது. அது தனிமனிதனாக இருக்கமுடியாது. தனி மனிதனும் பூரணமற்றவன், பலவீனன். பூரணத்தை அடைய சிலவேளைகளில் முயற்சி செய்கிறான். ஆனால் பல வேளைகளில் மிருகம் போலும் நடக்கிறான். அது தனிமனுச்சமூகமாய் இருக்க முடியாது. மனிதனால் உருவாக்கப்படும் சமூகம் மனிதனளவு. அது மனிதனின் பலவீனத்தையும் மூடத்தன்மையையும் பல தடவைகளில் வெளிப்படுத்துகிறது. எனவே இறைவனால் உருவாக்கப்படும் இறைமக்களும் அவர்களின் மதிப்புகளும் இலட்சியங்களுமே இறைவனளவு. அவர்களின் சீவியம் நீரில்தோன்றி மறையும் குமிழிபோன்ற சிலுசிலுப்பல்ல. நித்திய சீவியமும் அதுவே. தேவனே அவர்களை ஆட்கொண்டு, அவர் அவர்களிலும், அவர்கள் அவரிலும் பரமானந்தமாயிருக்கிறார்கள்.

---

## கடவுள்........

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யத்தை; போட்டான் பையில். ஓடினான் சினிமாக் கொட்டகையை நோக்கி... வழியில்...

ஒரே கூட்டம். என்னவென்று விசாரித்தான். யாரோ ஒரு கிழவி எட்டணாவைப் போட்டுவிட்டுத் தேடிக் கொண்டிருந்தாள். அவளோடுசேர்ந்து பாபுவும் தேடினான். அவன்கண்ணில் பட்டது எட்டணாநாணயம். பாபு அதை எடுத்துக் கிழவியின் கையில் கொடுத்துவிட்டு மீண்டும் கொட்டகையை நோக்கி ஓடினான், ஒருவழியாகக் கொட்டகையை அடைந்தான், அன்றைய படம் "திருடாதே." பாபுவிற்கு என்னமோ போல் இருந்தது. வரிசையில் நின்று முட்டிமோதிச் சென்றான். சீட்டுக் கொடுக்கும் அறையை நெருங்கினான். பையில் கையை விட்டான், பகீரென்றது பாபுவிற்கு. பையில் ஒரு மூலையில் ஓட்டையிருப்பதை அப்போதான் கவனித்தான் பாட்டியிடம் எடுத்துக் கொடுத்த எட்டணா நினைவிற்கு வந்தது. ஓடினான் பாட்டியை நோக்கி. அவ்விடத்தில் முன்பிருந்த கூட்டம் இல்லை. அப்பொழுது பாட்டி அருகிலிருந்த கோவிலுக்குப்போய் வந்துகொண்டிருந்தாள். அருகில் சென்ற பாபு, "பாட்டி நானெடுத்துக் கொடுத்த எட்டணா......"

வேறுநாணயம் அப்பா. நான் போட்டது எனக்குக் கிடைத்து விட்டது. அதிகம் கிடைத்ததை அருகில் இருக்கும் கோவில் உண்டியலில் போட்டுவிட்டு வருகிறேன் என்று கூறினாள். பாபுவிற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சரி நல்லது பாட்டி என்று கூறிவிட்டு வழிநடந்தான்.

அவன் நடந்துகொண்டிருக்கும்போது அவன்மனம் காசு சேரவேண்டிய இடத்தில் சேர்ந்துவிட்டது. ஆம், அது கடவுளிடமே சேர்ந்துவிட்டது. இனிமேல் திருடக் கூடாது என்று எண்ணியது. அவனையுமறியாது அவன்வாய் '**கடவுள் இருக்கிறார்' 'கடவுள் இருக்கிறார்**' என்று முணுமுணுத்தது.

"மூவுலகும் காப்பவனே!
நின்போல்வார் வேறில்லை;
அழியாவரம் தந்திடுவாய்.
அன்னைபோல் அன்புசெய்வாய்
பழிமுதல் போக்கிடுவாய்
பாவந்தனைப் போக்கிடுவாய்"

என்று யாரோ பாடுவது காற்றில் மிதந்துவந்து அவன் காதில் விழுந்தது.

---

# கலையுலகில் எம்மவள்

கலை உலகில், கத்தோலிக்க சமுதாயம், தூக்கம் கலைந்து. சுயநிலை உணர்ந்து விழிப்புணர்ச்சி பெற்று வருகிறது. இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு, சங்கீத பூஷணம் செல்வி எஸ். நிர்மலா! திருமறைக் கலாமன்றத்தில், இசைப் பகுதியில் வீணை மீட்கும் செல்வி நிர்மலா, வாய்ப்பாட்டில், தமிழகத்தில் தாம் பெற்ற பாண்டித்தியத்தை—எம்மவருள் பலரும் உய்த்துணர்ந்து அனுபவிக்க உழைப்பார் என்ற நம்பிக்கைகத். கலை உலகில் சுடர் விட்டெரிகிறது. அவரை எமது மன்றத்து இசை அமைப்பாளர் எம். யே. தாஸ் பேட்டி கண்டார். அதனைக் கீழே தருகின்றோம்.

நீ. மரிய சேவியர்
தி. ம. க. மன்றம்.

1. நீர் எப்போது சங்கீதம் பயிலவிருப்பமுற்றீர்?

சிறுவயதுமுதலே எனக்கு இசையில் ஒரு தனி ஆர்வம் இருந்தது. பாடசாலையில் படிக்கும்போதும் பல இசை நிகழ்ச்சிகளில் பங்குபற்றி வந்தேன். இதன் காரணமாகச் சிறந்த ஓர் இசைக்கல்லூரியில் சேர்ந்து முறையாக இசையைப்பயின்று இசைப் பட்டதாரியாக வரவேண்டுமென்ற விருப்பமேற்பட்டது.

2. யார் யாரிடம் நீர் பயிற்சி பெற்றீர்?

யாழ்ப்பாணத்தில் செல்வி செல்வம் நாராயணசாமியிடம் ஆரம்ப இசையைப் பயின்றேன். பின் தென்இந்தியாவிலுள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைப்பேராசிரியர் உயர்திரு. M. M. தண்டபாணி தேசிகர் அவர்களிடமும் மற்றும் திரு. S. வேணுகோபால் ஐயர், திரு. M. P. வச்சிரவேலு முதலியார், திரு. T. N. சிவசுப்ரமணியம்பிள்ளை ஆகியோரிடமும் முறையாக இசையைப் பயின்றேன்.

3. தற்போது கலை உலகில் உம்முடைய நிலை என்ன?

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 'சங்கீத பூஷணம்' பரீட்சையில் சித்தியடைந்திருக்கிறேன். கூடியசீக்கிரம் அரங்கேற்றம் செய்யவிருக்கிறேன்.

4. திருமறைக்கலா மன்றத்திற்கும் உமக்கும் உள்ள தொடர்பு?

திருமறைக்கலா மன்றத்தில் நான் ஓர் உறுப்பினராக இருக்கிறேன்.

5. வானொலி நிகழ்ச்சியில் பங்குகொண்டீரா?

ஆம் பங்குகொண்டேன். சமீபத்தில் திருமறைக்கலா மன்றத்தினர் அளித்த 'எழுதிய கரம்' என்னும் வானொலி நாடகத்திற்கும், தொழிலாளர் நிகழ்ச்சிக்கும் நான் வீணை வாசித்தேன்,

6. எத்தகைய நிகழ்ச்சிகளில் பங்குகொள்கிறீர்?

தேவ ஆராதனைகளிலும், நாடகங்களிலும் பங்குபற்றி வருகின்றேன்.

7. சங்கீத வகுப்புகள் நடத்துகிறீரா? எங்கே?

ஆம். வீட்டிலும், பாஷையூர் திருக்குடும்ப கன்னியர் மடத்திலும் சங்கீத வகுப்புகள் நடத்தி வருகிறேன்.

8. கத்தோலிக்க மக்கள் எந்த அளவிற்குக் கலையுலகில் இடம் பெற்றுள்ளார்கள்?

கத்தோலிக்க மக்கள் தற்பொழுது தமிழ்க்கலாச்சாரத்தைத் தங்கள் வாழ்வின் உயிரூட்டமாகக் கொண்டுவருவதற்கு முயன்று கொண்டிருக்கிறார்கள். இதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளிப்பது கத்தோலிக்க மக்களின் முக்கியகடமையாகும். கத்தோலிக்க மக்களாகிய இளவல்களின் உள்ளங்களில் கலையுணர்ச்சி பரவலாக ஊற்றெடுத்துப்பாய்கின்றது. இந்த உணர்ச்சிகளுக்கு ஆக்கம் கொடுக்குங்கால் கலையுலகில் கத்தோலிக்கம் வளர்ச்சியடையும் என்பது எனது நம்பிக்கை.

---

## கைகொடுப்பா ...

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

ரோவொனில் ஆன்மவேதனை அதிகமடைகின்றனர். உடலைவிட ஆன்மா மேலானதாய் இருப்பதால் அதன் வேதனையும் அதிகமாகத்தானேயிருக்கும். தமக்குத்தானே எந்த உதவியும் செய்ய முடியாதிருக்கும் ஆன்மா தன் வேதனையை முழுதும் அனுபவித்துத்தானாகவேண்டும். ஆனால் அதனைக் குறைக்க நம்மால் மட்டும் முடியும்.

இத்துன்பத்தைத் துடைக்கும் துடைப்பங்களாவன திருப்பலி, செபமாலை, பரித்தியாகங்கள், தானதர்மம் என்பனதான். நோயாளர், ஏழைகள் போன்றோர்க்கு எம்மாலான உதவிகளும் செய்யலாம். இது விடயத்தில் புனித சின்னத் திரேஸ் ஒரு மாதிரிகையாக விளங்குகிறாள். பரித்தியாக சிந்தையுடன் வழியில் கிடந்த சிறு துரும்பை எடுத்து குப்பைத் தொட்டியில் போட்டாளாம். உடனே உத்தரிப்பு ஸ்தலத்திலிருந்து ஓர் ஆன்மா மோட்சம் சென்றதைக் கண்டாள்.

எவ்விதம் இவ்வுலகில் கிறீஸ்துவுக்கு ஆன்மாக்களைப் பெற்றுக் கொடுப்பது கடமையோ அதேபோல் உத்தரிப்பு ஸ்தலத்திலிருந்து ஆத்துமாக்களுக்குக் கைகொடுத்துக் கரைசேர்ப்பதும் எமது கடமையாகும். அவர்கள் வேகுவதை நாம் பார்த்துக் கொண்டிருப்பதா? கைகொடுப்போம், கரைசேர்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "செபமாலைக்காறி சாகவில்லை!!"

"செபமாலைக்காறி சாகவில்லை!! ஆ! என்ன!!! பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேணும். நம்ப முடியவில்லையே" என்றார் கட்டளைச்சுவாமியார்.

சென்மேரீஸ் தேவாலயத்தின் பங்கில் செபமாலைக்காறியைத் தெரியாதார் இல்லை அவள் பெயர் சொர்ணம் 'சொர்ணம்' என்று சொற்ப பேருக்கு மட்டுந்தான் தெரியும் கட்டளைச் சுவாமிமார் பல மாறிவிட்டனர். ஆனால் செபமாலைக்காறியை அவர்கள் மறக்க முடியாது. "கோவிலிலே குடியிருக்கிறாள் செபமாலைக்காறி" என்று வீண் பேச்சுக்காறர் கூட அவளைச் சும்மா விடவில்லை. 'செபமாலை' சொல்லுவதென்றால் சொர்ணத்துக்கு அதைவிட மகிழ்ச்சி வேறில்லை. அவள் வீட்டில் இரவு நேரத்தில் 'குடும்ப செபமாலை' ஓதாத நாளே கிடையாது. சொர்ணத்தின் கணவன் ஓர் ஏழைக் குடியானவன். கூலிவேலை செய்து சொற்ப வருமானத்தைச் சொர்ணத்திடம் கொடுத்துவருவான். ஏழை சொர்ணத்தின் குடும்பத்தில் ஏழு பிள்ளைகள். வறுமையின் பிடியில் கசங்கிய சொர்ணம் வருந்திய நாளேயில்லை. கணவனின் சொற்ப சம்பளத்திலும் சொர்ணத்தின் 'செபமாலைப் பக்தி' குடும்பத்தில் இன்பத்தையூட்டியது.

ஐப்பசி மாதத்தில் அயல் வீடுகளில் செபமாலைச் சுற்றுலாவை நடத்திவருவாள் சொர்ணம். தினமும் ஐப்பசியின் அடைமழையிலும், அவள் அயல்வீட்டுச் செபமாலைப்பணியை நடத்தத் தவறாள். ஆண்டுகள் பல கடந்தன. அவளின் செபமாலைப் பக்தி அலுப்புத் தட்டியதேயில்லை. கணவன் கடனால் பயந்து கவலைப்படும்போதும், பெற்றபிள்ளை நோயால் அவஸ்தைப்படும்போதும், கைகளிலே தவண்டு புரளும் செபமாலை மணிகள் அவளைத் தேற்றாமல் விடவில்லை.........

செபமாலைக்காறியின் வீட்டிலுள்ளவர்கள் ஒன்பதுபேர். கணவன் கூலிக்கும், பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்கும் போய்விட்டால் சொர்ணம் மட்டும்தான் அந்தக் குடிசையில் மாலை நேரம்வரை தன்னந்தனியாகவிருந்து தன் வீட்டுப் பணிகளைச் செய்வாள். அவள் வாழுங் குடிசையில் அழகிய மடோனாமாதாவின் படத்தைத்தவிர அங்கு அலங்கரிப்பதற்கு வேறு ஒன்றுமில்லை.

அன்று ஒருநாள்...... பகல் வேளை அடுக்களையில் சமைத்துக்கொண்டிருந்தாள் சொர்ணம். காலையில் சாப்பாட்டுக்குக் காய்ச்சிய கஞ்சியைக் கணவனுக்கும் கண்மணிகளுக்கும்கொடுத்துவிட்டு பசியோடு புசியாமல் இருந்துவிட்டாள். பரமண்டல மாதாவின் பக்தியால் பசியாறிய சொர்ணம் வயிற்றுப் பசியால் வாட்டமுற்றிலாள். ஆயினும் ஆக்கை அறியுமோ அவள் உள்ளம்? மயங்கி விழுந்தாள் மட்பாண்டங்களின்மேல். அருகில் இருந்த குப்பிலாம்பு சரிந்துவிட்டது......: எண்ணெய் ஊறி அடுப்பண்டை பரவவே தீப்பற்றத் தொடங்கியது... மூளாசியது... அருகிலிருந்த செத்தையில் பிடித்த தீ செந்நிறச் சுவாலையுடன் வானத்தையளாவியது...... "செபமாலைக்காறி என்ன ஆனாள்" யாரும் புலம்பாமலில்லை. வீடு திரும்பிய

---

ஆசிரியர்

**F. C. வேதநாயகம்**

---

சொர்ணத்தின் செல்வங்கள் கதி என்ன! கூலிப் பிழைப்போடு கூழைக் குடிக்கவந்த கணவனின் நிலை என்ன! செவ்வானஞ் சிரிக்குமுன் சொர்ணத்தின் குடிசை குவிந்துவிட்டது சாம்பலாக. பசியால் வாடிய சொர்ணத்தின் சோகக் கதையென்ன! தாயையிழந்து தவிக்கும் ஏழு பிள்ளைகள், மனைவியைத் தீக்கிரை கொடுத்துத் திண்டாடும் இனிய கணவன்... இத்தனை பேரையுந் தேற்றுகிறார் சென்மேரீஸ்கோவிற் கட்டளைக்குரவர்..."சொர்ணம் சொர்க்கபூமியில் சௌந்தரிய ரூபமுள்ள மடோனா மாதாவின் மடியில் இருக்கிறாள். அங்கிருந்து உங்களை என்றும்போல் காப்பாற்றுவாள்" என்கிறார் சுவாமி... சுவாமியின் தேறுதல் கேட்டும் தேம்பியழும் பிள்ளைகள் தந்தையைக் கட்டியழுதவண்ணம் கலங்குகிறார்கள்... நேரம் இருள் சூழ்ந்துவிட்டது...... சென்மேரீஸ் பங்கு மரியாயின் சேனை ஊழியர்களின் உதவியால் செபமாலைக்காறி சொர்ணத்தின் குடிசை மறுதினமே பழைய தோற்றத்துடன் காட்சிதந்தது.

தந்தையும் பிள்ளைகள் ஏழும் சொர்ணத்தின் நீங்காத நினைவோடு அவளின் தீராத ஆசையில் துளிர்த்த செபமாலைப் பக்தியைக் கைவிடவில்லை. குடிசை தீக்கிரையாகிய மூன்றாம்நாள் இரவு குடும்ப செபமாலையில் மூழ்கியிருந்த சொர்ணத்தின் குடும்பத்தினருக்கு ஏற்பட்டது என்ன!... யாரோ ஓலமிடும் சப்தம் கேட்டது... திடுக்கிட்டான் கணவன், திகைத்தார்கள் பிள்ளைகள். 'ஓலம்'வந்த திசையை தேடியலைந்தார்கள். என்ன ஆச்சரியம்! பழைய குடிசையின் குசினியிருந்த தரையின் கீழ் இருந்துவரும் 'ஓலம்'... தரையிலிருந்து அசையும் மண்படை! எல்லாம் அச்சமும், வியப்பும் சொல்ல முடியவில்லை. மண்படை மெல்ல மெல்லக் கிழம்பி ஒரு பெரும் மூடியாக வெளியே திறக்கப்பட்டது. பயத்தினாலும், பதட்டத்தினாலும் பாதவித்துக் கொண்டுநின்றவண்ணம் சொர்ணத்தின் கணவனும் பிள்ளைகளும் கண்டதென்ன!...... அங்கே! செபமாலைக்காறி சொர்ணம்! கையிலே பழைய குடிசையில் தொங்கிய மடோனாப் படத்துடன் இளைத்துக் களைத்துக்கொண்டு வெளியே வருகிறாள். விரல்களிலே விருந்துண்ணும் மணிக்கற்கள். பேயோ! பசாசோ என்று ஒருகணம் திகைத்தார்கள். பின்பு சொர்ணத்தைக் கையிலேந்தி அவள் ஆறுதல்பெற ஆவன செய்தார்கள். சற்றுக் களைப்பாறியபின் சொர்ணம் தன் மறைவிடத்தைப் பற்றிய கதையைக் கூறுகிறாள்..."பசியின் மயக்கத்தில் இருந்தசமயம் தீயின் வெக்கையால் உணர்வுற்று எழுந்தேன். நாலா பக்கமும் தீ பரவியதால் தம்பியோட எண்ணி என் ஒரே சொத்தான மடோனா படத்தையும் செபமாலையையும் எடுத்துக் கொண்டு ஓட முயன்றேன். சடுதியாக என் கால்கள் நிலத்திலுள்ள குளியொன்றில் புதைந்து முழுவதும் உள்ளே விழுந்துவிட்டேன். நான் விழுந்தஇடம் ஓர் பழைய சுரங்கமாகவிருந்தது. உள்ளே பெருங் கோட்டைகளும், அரண்மனைகளுமிருந்தன. அங்கே சிறு குளிர்மையும் சிறிய தென்றலும் எப்படியோ இருந்தன. அந்தநிலையில் களைப்பாறியபின் ஒரு சிறு துவாரத்தின் வழியாக ஒளி வருவதைக் கண்டேன். மெல்ல, மெல்ல வந்து அவ்வளியே திறந்தேன்... உங்களைக் கண்டேன். கண்மணிகளைக் கண்டேன்....புதிய குடிசையில் புதுமணம் வீசுவதைக் கண்டேன்"......இப்படிப் புலம்பினாள் செபமாலைக்காறி சொர்ணம். மகிழ்ச்சியின் மடியிலே புரண்ட சொர்ணத்தின் கணவனும் பிள்ளைகளும் ஓடோடிச் சென்று கட்டளைச் சுவாமியாரிடம் நடந்தவற்றைச் சொன்னார்கள். ஆச்சரியமும் அபூர்வமும் நிறைந்த செபமாலைக்காறியின் கதை கேட்ட கட்டளைச்சுவாமியார் திகைத்துநிஸ்றார்... நிலை தடுமாறினார்.........

"செபமாலைக்காறி சாகவில்லை!! ஆ! என்ன!!! பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேணும். நம்ப முடியவில்லையே!" "குடும்ப செபமாலை குடும்பத்தைக் காத்தது." குருவானவர் கூறியது இதுதான்.


## மாக்குருஸ்-பூ வியாபாரி

⁕ திருமண வைபவங்கள்
⁕ ஆராதனை அலங்காரங்கள்
⁕ கோயில் திருவிழாக்கள்

மற்றும் சிறப்பான வைபவங்களுக்குரிய மாலைகள், பூச்செண்டுகள் அனைத்திற்கும் எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்.

**"மாக்குருஸ்"**

சிறந்த மலர்கள், உயர்ந்த மரக்கறி வகைகள் நிறைந்த அளவில் என்றும் கிடைக்கும்.

19, லேடி மக்கலம் டிறைவ்,
நுவரெலியா:


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல: MB/9816.

(1) சந்தியா டோமினிக் லோறன்ஸ்சும்
(2) மனைவி சவுரிஅம்மா இருவரும் கரையூர், யாழ்ப்பாணம் —வழக்காளிகள்

எதிராக

(1) யேக்கப் யோஸ்சைப்பும் மனைவி
(2) ஆரோக்கியம்—இருவரும் 25, மவுன்காமல் ரோட், யாழ்ப்பாணம்.

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் MB/9816-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை, 1970-ம் ஆண்டு மார்கழி மீ 16-ம் உ புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை:

முதல் வட்டி ரூபாய் 6366/-ம் 9-3-68 தொடக்கம் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 602/05சதம் அதாவது ஏற்பட்ட செலவு ரூபா 460/45சதம் வேளியாத்துச் செலவு ரூபா 78/50சதம் இனிமேல் வரும் செலவு ரூபா 63/10 சதம் வழக்குச் செலவால் ரூபா 150|-தும் அத்துடன் ரூபா 1500/-ம் கட்டப்பட்டிருக்கிறது.

### ஆதன விபரம்:

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், யாழ்ப்பாணப் பிரிவு சுண்டிக்குளி கோயிற்பற்று கரையூர் இறை "அரியதுரையன் தறை அல்லது ஆறுத்தை வளவு பரப்பு நிலலாச்சம் இரண்டு (2) இதில் கிழக்குப்பக்கமாக நிர்ந்தமாக்கப்பட்ட நிலப் பரப்பு ஒன்று (1) 1964-ம் ஆண்டு மாசி மாதம் 7-ம்திகதி உத்தரவு பெற்ற லாந்தா A. லாசறஸ் அவர்களால் 3113-ம் இலக்கத்தால் தயாரிக்கப்பட்ட படத்தால் காட்டப் பட்டிருக்கும் துண்டுக்காணியும் கட்டிடங்களும் அவைகளைச் சேர்ந்தவைகளும், வடக்கு எல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் தண்ணீர் பங்கும் கொண்டதுமான இவ்ஆதனத்திற்கு எல்லை:கிழக்கு செல்லமுத்துவின் ஆதனமும் மற்றவர்களும். வடக்கு—சுவாமிநாதர் இரத்தினத்தின் ஆதனமும் மற்றவர்களும். மேற்கு: லோப்பு கொஸ்ரின் கைம்பெண் கிளாரம்மாவின் ஆதனமும், ரோட்டும். தெற்கு: இளையதம்பியின் மனைவி மகேஸ்வரியினதும், S. அந்தோனிப்பிள்ளையினதும் ஆதனம். இதில் அடங்கியவைகளில் உள்ள எல்லா உரிமைகளையும் சேர்ந்தவைகளையும் சேர்ந்த இது முழுவதும்.

சி. செ. பாலசிங்கம்
கொம்மிஷனர்
& விலைமதிப்பாளர்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.
1-11-70.

## நன்றித் துதி

பரிசுத்த யேசுவின் திரு இருதயத்தின் இரக்கத்தினாலும் பரிசுத்த தேவதாயார், புனித யூதாததேயு, அர்ச். சதாசகாய மாதா, அர்ச். அந்தோனியார் மற்றும் சகல அர்ச்சியசிஸ்டர்களின் மன்றாட்டினாலும் எனக்கு சுகப்பிரசவம் கிடைத்தமைக்கு நன்றியறிதலாக இதனைப் பிரசுரிக்கின்றேன். காலதாமதத்திற்கு மன்னிப்புக் கோருகின்றேன். இவர்களின் நாமம் புகழப்படுவதாக.

பள்ளிமுனை. ஓர் அடியாள்.

✠

**திரு. எஸ். யோசேவ் இராசதுரை**
(முன்னாள் பெரியவிளான் தலைமைக்காரர்)
அவர்களின்

## 6-ம் வருட ஞாபகம்

பிறப்பு: 1-2-1915. இறப்பு: 9-11-64

ஆறுண்டு காலமோ
பறந்த போதும்
நாங்கள் உம்மை
நெஞ்சினிலே மறக்கவில்லை
பாலோடு தேனாக
வாழ்ந்த காலம்
பனிபோல போனதெனக்
கவலையானோம்
மேலோகம் வந்தடியேசர்
ஒரு நாள் காண்போம்
மெய்யிறைவன் எங்களரும்
செபங்கள் கேட்டு
காலாதிகாலமாய்
தூயோர்க்கென்றே
காத்துவரும் மோட்சத்தை
யளிப்பார் தானே.

நித்திய இளைப்பாற்றியை இறைவன் அவருக்கு அளிப்பாராக. சமாதானத்தில் இளைப்பாறுவாராக.

இவரின் மறைவுக்காக 11-11-70 புதன்கிழமை காலை இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடத்திலும், பெரியவிளான் யுவானியார் கோவிலிலும் அக்கப்பாடற்பூசைகள் ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறுவோர் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடும்படி தயவாய் வேண்டுகின்றோம்.

இவரின் மறைவால் துயருறும்: மனைவி, மக்கள் மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

**திருவாளர் எஸ். செபஸ்தியாம்பிள்ளை**
அவர்கள் அமரத்துவமடைந்த

## 2-ம் வருட ஞாபகம்

தோற்றம்: 5-3-1888. மறைவு: 31-10-1968.

எங்களுக்கு அன்புசெய்து எங்களால் என்றும் மறக்கமுடியாத விதமாய் எங்களுடன் வாழ்ந்து எங்களை விட்டுப்பிரிந்து 18-10-68-ல் இறைவனடி சேர்ந்த திரு. எஸ். செபஸ்தியாம்பிள்ளையின் ஞாபகார்த்தமாக அன்று சனிக்கிழமை காலை 6-30 மணிக்கு வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் தேவாலயத்தில் துக்கப்பாடற்பூசையும், வவுனியா புனித அந்தோனியார் தேவாலயத்தில் பூசையும் நிறைவேறியது.

இதைக் கண்ணுறும் அன்பர்கள் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளும்படி பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்: மனைவி: திருமதி அந்தோனியாப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை மக்கள் வண. S. E. விஷயரெட்னம், O. M. I., சங். சிஸ் மேரி ஜெறடீன், H. F., திரு. S. J. நவரெட்ணம், O. A., கல்விக் கந்தோர், வவுனியா. மருமகள்: திருமதி M. J. நவரெட்னம் ஆசிரியை, இறம்பைக்குளம் மகா வித்தியாலயம், வவுனியா.

பேரப்பிள்ளைகள்: டாக்டர் Mrs. மேரிதீற்று செகராசிங்கி, டாக்டர் Miss. மேரிதிரேசா சவிரிமுத்து, செல்வி சந்திரிகா நவரெட்னம், செல்வன் பிறெடிறிக் நவரெட்னம், செட்றிக் நவரெட்னம், பற்றிக் நவரெட்னம்.

வல்வெட்டித்துறை.

* கடந்த வாரக் காவலனில் எஸ். செபஸ்தியாம்பிள்ளை என்பதற்கு எஸ். சந்தியாப்பிள்ளை என தவறுதலாகப் பிரசுரிக்கப்பட்டமைக்கு வருந்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி

### கார்த்திகை — 1970

| | | | |
|---|---|---|---|
| 8 | ஞாயிறு | வருட 32ஆம் ஞாயிறு | [ப] |
| 9 | திங்கள் | லத்தறன் தேவாலயம் | [வெ] |
| 10 | செவ்வாய் | தினப்பூசை | [ப] |
| 11 | புதன் | புனித மடுத்தீன் | [வெ] |
| 12 | வியாழன் | தினப் பூசை | [ப] |
| 13 | வெள்ளி | ,, | [ப] |
| 14 | சனி | புனித யோசபாத் | [சி] |

*சத்தியவேத பாதுகாவலன்*

# வளர்ச்சி

எம்மில் அநேகமானோர் ஆரம்பத்தில் நன்றாகத்தான் தொடங்குகிறோம். ஆனால், காலம் செல்லச் செல்ல என்ன நடக்கிறது? ஆர்வத்துடன், உற்சாகத்துடன், உயர்ந்த நோக்கங்களுடன் இளைஞர் தம் வாழ்வினை ஆரம்பிக்கின்றனர். பணத்தாசை, சுயநலம் முதலிய கீழ்த்தரமான நோக்கங்கள் அறவே இன்றி உலகுக்கும், சமூகத்துக்கும்பணிபுரிய முன்வருகிறார்கள். தமது அறிவைப் பெருக்கவும், திறமைகளை அபிவிருத்தி செய்யவும் தம்மாலான வழிவகைகளைக் கையாளுகின்றனர்.

சில வருடங்கள் கழிந்ததும் இதே மக்கள் எவ்விதம் மாறிவிடுகின்றனர். இப்போது பிறருக்குத் தொண்டு செய்வதும், தனது திறமைகளை அபிவிருத்தி செய்வதும் ஒருவனுக்கு அசௌகரியமாகப்படுகிறது. தன்னை உயர்த்தக்கூடிய பண்புகளைக் கைவிடுகிறான். பணத்தாசை அதிகரிக்கின்றது. பிறர் மட்டில் அன்பும், ஆதரவும் தேய்ந்து சுயநலம் மிகுகின்றது. ஆயினும் அவன் "நல்ல" மனிதனாகவே கருதப்படுகிறான்.

அநேகருடைய வாழ்வில் அன்பின் வளர்ச்சி இப்படித்தான் ஆகிவிடுகிறது. உயிருள்ள எந்தப் பொருளும் வளர்ச்சி அடைவதுபோல் அன்பும் வளர்ந்து வருவதுதான் நியதி. அளவில் இல்லாவிடினும் தீவிரத்தில் அது வளரவேண்டும். இறைவனை ஒருவன் ஓரளவு தீவிரமாக நேசித்தால் அதைவிடக் குறைந்த தீவிரமுள்ள செயல்களும் அவனது நேசத்துக்குத் துணை செய்யும். ஆனால், அவை அவனது அன்பினை வளர்க்க மாட்டா, தான் செய்யும் செயல்களால் புண்ணியத்தைத் தேடிக் கொண்டாலும் அவனது ஆன்மீக வாழ்வை அவை உயர்த்தமாட்டா.

புனித சின்னப்பர் உடல் வல்லுனர்களைப் போல் நாம் முயல வேண்டுமென்கிறார். இருபது அடி பாயக் கூடிய ஒருவன் பதினைந்து அடிகளே பாயப் பயிற்சி செய்துகொண்டிருந்தால், அவனுக்குப் பாயும் திறமை இருக்குமெனினும் முன்னேற்றம இருக்காது. இறைவனை நாம் நேசிக்கக்கூடிய அளவைவிட, குறைவாக நேசித்தால், அல்லது வேறெதையும் அவரைவிட அதிகமாக நேசித்தால், அந்த அன்பு முற்றும் மறைந்து போகாவிடினும் பலவீனமடையும்.

இந்தப் பலவீனம் பல்வேறு உருவங்களில் வெளிப்படுவதைக் காணலாம். முன்பு தாராள மனதுடன் தன்னைக் குடும்பத்துக்கு அர்ப்பணித்த தாய், தனது வேலைகளைக் குறித்து முனகத் தொடங்குவதும், ஒரு "நல்லவர்" பிறரது குறை குற்றங்களைப் பலர்முன் பேசத் தொடங்குவதும், தமக்கு வழக்கமாக இருந்த பொறுமையை இழந்து பிறர்மீது கடுஞ்சொல் பிரயோகிப்பதும் இத்தகைய பலவீனம்தான். எமது வாழ்வைச் சீர்செய்து, ஆத்துமத்தின் தசைநார்களை வலுப்பெறச் செய்ய வேண்டும், எமது தோட்டம் இப்படிக் களைமண்டிப்போகப் பார்த்துக் கொண்டு இருக்க மாட்டோம். ஆத்துமத்திற் களைகள் முளைக்கும்போது அவற்றைப் பிடுங்கி வாழ்வைப் புதுப்பிக்க வேண்டாமா?

---

பிரார்த்தனையானது காலையின் திறவுகோல்; மாலையின் தாழ்ப்பாள். பிரார்த்தனையின்போது இதயமில்லாத சொற்கள் படைத்திருப்பதைவிட, சொற்களில்லாத இதயம் படைத்திருப்பது விசேஷம்!

—மகாத்மாகாந்தி

# வத்திக்கானின் அதிசயம்

வத்திக்கான் என்பது 109 ஏக்கரில் அடங்கியுள்ள ஒரு சின்னஞ்சிறிய இராச்சியமாகும். பரிசுத்த ஸ்தானத்துக்கும், வத்திக்கானுக்குமிடையே 1929ஆம் ஆண்டு ஏற்பட்ட லத்தறன் உடன்படிக்கை மூலம் இது ஒரு சுதந்திர தனி இராச்சியமாயிற்று. இதன் அரசர் பாப்பானவரே. சிறிய இராச்சியமானாலும் இதில் அடங்கியுள்ள உலகப்பிரசித்திபெற்ற கட்டடங்களையும், மறு விசேடங்களையும் காலந்தோறும் கண்ணுறுவாரெல்லாம் ஆச்சரியமுற்றுச் செல்வார்கள். அவைகளின் விபரங்கள் வருமாறு:

1. உலகின் மகாப்பெரிய ஆலயமாகிய சம்பேதுருவானவர் மகாலயம். 2. பாப்பரசரின் மாளிகை. 3. பாப்பரசின் காவலர் வசிக்கும் பாளையம். 4. அச்சகம். 5. பெல்வெடெறே மாளிகை. 6. கலைப்பொருள் காட்சிச்சாலை. 7. நூல்நிலையம். 8. நூதனபொருள் காட்சிச்சாலை, 9. சிற்ப, சித்திரப் பொருள் காட்சிச்சாலை. 10. ஞானசாஸ்திர கழகம். 11. வத்திக்கான் தோட்டங்கள். 12. வானொலி நிலையம். 13. சிவில் அரசாங்க மாளிகை. 14. புகையிரத நிலையம். 15. சக்கிறிஸ்தையும், குருமனையும். 16. முன்புதிருக்கந்தோரென அறியப்பட்ட விசுவாசசத்திய போதனை திருச்சங்க காரியாலயம். 17 உத்தியோகஸ்தர்களின் வாசஸ்தலம்.

இந்தப் பதினேழும் வத்திக்கான் இராச்சியத்தைத் தரிசிக்கும் காட்சிப் பிரியர்கள் அனைவருக்கும் பதினேழு அதிசயங்களாகத் தோன்றும். இவற்றின் சிற்ப-சித்திரவேலைப்பாடுகளை சிறப்பாக மிக்கேல் ஆஞ்செலோ முதலாம் சித்திர, சிற்ப வல்லுநர்களின் கைவேலைப்பாடுகளைக் கண்ணுற்று அவர்கள் பிரமித்து நிற்பர். உலகின் ஆலயங்களுக்கெல்லாம் நடுநாயகமாய் விளங்கும் சம்பேதுருவானவர் மகாலயத்தினதும், பாப்பரசரின் வத்திக்கான் மாளிகையினதும் மாட்சியையும் கண்டு பரவசமெய்துவர். அங்குள்ள கண்காட்சிச் சாலைகளையும், அபூர்வநூல் நிலையத்தையும் பார்க்கும் பேரறிஞர்கள் பலரும் பேருவகையெய்துவர். அதனால் எவரும் இந்தச் சின்னஞ்சிறு இராச்சியத்தில் இப்படியான பென்னம்பெரிய விசேடங்களாவென்று வியந்துபாராட்டுவது அதிசயமன்று.

# நோபெல் பரிசு

அண்மையில் வெளியான 'பாதுகாவல'னில் உலகப்பிரசித்திபெற்ற கத்தோலிக்க எழுத்தாளர் ஒருவரின் மறைவு குறித்தும், அவர் நோபெல் பரிசுசன்மானிக்கப் பெற்றவரென்றும் செய்தி வெளிவந்துள்ளது, ஆனால், இந்த நோபெல்பரிசு பற்றிய வரலாற்றை அறிவார் மிகச் சிலரே எனலாம். அதனால் அதைப்பற்றிச் சிறுக எழுதுவது நன்றாகும். நோபெல் பரிசை அடியிட்டவர் அல்பிறெட் பேர்ணட் பேண்ஹாட்நோபெல் அவர்களே. அவருடைய பெயரிலிருந்தே நோபெல்பரிசு என வழங்கலாயிற்று.

பெருமளவில் யுத்தத்துக்குப் பயன்பட்டு அழிவை உண்டுபண்ணும் டைனமெற்றைக் கண்டுபிடித்தவரான இவர் உலகில் சமாதானத்தை விருத்திசெய்வதற்கும் அருமையான காரியம்ஒன்றைச் செய்துவைத்துப்போயிருப்பது ஆச்சரியமாகும்; அதாவது டைனமைற்றைக் கண்டுபிடித்த சுவீடன் நாட்டினரான இவர் தமது மரணசாதனத்திலே வருடந்தோறும் ஒரு சமாதானப்பரிசையும், வைத்தியக்கலை, இரசாயனக்கலை, மருத்துவக்கலை இலக்கியக்கலையாகிய நான்கிற்குமாக நான்கு பரிசுகளையும் வழங்குமாறு நிபந்தனையோடு பெருந்தொகைப் பணம் எழுதிவிட்டுப் போயினர்.

## அன்புத் தெய்வத்தைச் சிந்தியுங்கள்

உலகில் அறிஞர்கள் பலர் பேசியிருக்கின்றனர். அறநெறியாளர் பேசியிருக்கின்றனர்; ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தோர் பேசியிருக்கின்றனர். ஆனால் இவர்களுள் யாரேனும் தம் சொந்தப்பெயரால், தமக்குள்ள சொந்த அதிகாரத்தை முன்னிட்டுப் பேசியதுண்டா? அதுதான் இல்லை.

தன் அறிவுக்கு ஆதாரமாயுள்ள நூல்களைக் காட்டித்தான் அறிஞன் பேச முடியும். நூல்களிற்காணும் கருத்துக்களை விளக்குவான், தன் அறிவையும், அனுபவத்தையும் துணைகேட்பான். நூலிற்காணும் ஏதாவது ஓர் உண்மையின் பெயராற்றான் பேசுவான். "உண்மை" என்பது அவனுக்கு மேற்பட்டதாகவே இருக்கும். "உண்மை என்பதொன்றுண்டு" அதன் பெயரால், உங்களைக் கேட்கிறேன், என்ற தோரணையிற்றான் பேசுவான். "நானே உண்மை" என்று கிறீஸ்து பேசியது போல யாரும் பேசியதில்லை, பேச நினைத்ததுமில்லை.

அறநெறியாளனை எடுத்துக் கொள்வோம். அவனும் அப்படித்தான். அறம், ஒழுக்கம், நீதி, சட்டம் இவற்றின் பேராற்றான் பேசுவான். அவை அவனுக்கு மேற்பட்டவை. "நீதியின் சட்டத்துக்கிணங்க அறநெறிப்படி ஒழுங்குகள் இல்லையெனிற் குற்றமாகும், கடவுளுக்கு ஏற்காததாகும். அவர் தன் குரலாகிய மனச்சாட்சியை எதிர்ப்பது தவறு" என்ற தோரணையிற் பேசுவான். ஆட்சியாளனும் அப்படியே. "நாட்டின் நலனுக்காக உழையுங்கள்" என்பானேயன்றி, "எனக்காக என் இன்பத்திற்காக" என்று கூறமாட்டான். எதிரிகள் நாட்டைத் தாக்க நேரிட்டால், "உங்கள் மீட்புக்காக, நாட்டின் பாதுகாப்புக்காகப் போராடுங்கள்!" என்று படை வீரரை உற்சாகமூட்டுவான்.

ஆனால், நம் அன்புத் தெய்வமாம் கிறிஸ்துவோ, "எனக்காக வாழுங்கள்; என் நிமித்தம் நற் செயல்களைச் செய்யுங்கள்; என் நிமித்தம் துன்பங்களைச் சகித்துக் கொள்ளத் தயங்காதீர்கள்" என்றெல்லாம் கூறியுள்ளார். இதற்கிணையாகப் பேசியவர் வேறு யாருமில்லை!

— ஞானகி

## செஞ்சீனாவில் மீளவும் கிறீஸ்த போதகம் செய்யும் அறிகுறிகள்

கொமியூனிஸ்தர் சீனாவின் ஆட்சியைக் கைப்பற்றுமுன் அங்கு வேதபோதகம் செய்துவந்த கத்தோலிக்க துறவிகள் சபையின் பிரதிநிதிகள் சுமார் 40பேர் சிலவாரங்களின்முன் றோமாபுரியில் ஒன்றுகூடி மீளவும் சீனாதேசத்தில் கிறீஸ்துநாதரின் சுவிசேஷத்தைப் போதிக்க ஆவலுடையவராய் வழிவகைகளை ஆராய்ந்தனர். இவர்களுடைய ஆலோசனைகள் தூரகிழக்குப் பிரிவுகளின் யேசுசபைத் தலைமைக் குருவாகிய வண. டார்கன் சுவாமியாரின் தலைமையில் நடைபெற்றன. சீனாவில் இப்போதுள்ள திருச்சபையின் நிலைமையை எவ்வாறு அபிவிருத்தி செய்யலாமென ஹொங்கோங் தீவிலிருந்து கிடைத்த ஆலோசனைகளின் அடிப்படையிலேயே இவ்வாலோசனைகள் நடந்தேறின.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நிக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் [illegible] அச். ஞானசாமுனிவர் அச்சகத்தில் 1970 ஆம் ஆண்டு கார்த்திகை மீ 7ஆம் உ. சனிக்கிழமை [illegible] "கலைச் சிறப்பு" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300; தாபிதம்: 1876;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org